## வீரகெட்டிய பிரதேச சபை
## அம்பாந்தோட்டை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வீரகெட்டிய பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டினதும் கடந்த 03 ஆண்டுகளுக்கும் உரிய ரூபா 10,812,700 தொகையான முத்திரைக் கட்டண வருமானம், மீளாய்வாண்டிற்குரிய ரூபா 90,850 தொகையான வாகன தரிப்பிட கட்டணங்கள் மற்றும் ரூபா 3,300 தொகையான இருப்பு மீதிகளை நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான JCB இயந்திரத்தின் ரூபா 4,781,250 தொகையான கிரயம் இரு தடவை கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 879,895 தொகையான செலவினங்களுக்காக கடன்பட்டோர் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான வருமான கடன்பட்டோர் ரூபா 249,028 இனால் கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அதற்குரிய புத்தகங்கள், ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுக்கிடையே ரூபா 77,361,596 கூட்டுத்தொகையான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

#### 1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

i. 2007 ஆம் ஆண்டிற்குரியதாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 822,420 தொகையான சந்தை குத்தகைப் பணம் மற்றும் 2012 ஆம் ஆண்டு முதல்

அறவிடப்பட வேண்டிய ரூபா 28,650 கூட்டுத்தொகையான ஏக்கர் வரித்தொகை 2017 யூன் 27 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

ii. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,256,092 தொகை நிலுவையாக இருந்தது. 2017 யூன் 27 ஆந் திகதியில் உள்ளபடியான 01 முதல் 05 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரிய நிலுவை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 965,796 ஆகும்.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

i. தொடர்ச்சியான நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்படும் ரூபா 120,100 தொகையான செலுத்த வேண்டிய சம்பளங்கள் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 41,893 தொகையான பங்களிப்புப் பணத்தை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. கிராமத்திற்கு கிராமம் வீட்டுக்கு வீடு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டிற்குரிய பணிகள் பூர்த்திசெய்யப்பட்ட 20 கைத்தொழில்களுக்காக செலுத்த வேண்டிய ஒப்பந்தப் பணத்தின் கூட்டுத்தொகை ரூபா 2,340,946 ஆகும்.

iii. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான தீர்க்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 25,638,006 ஆக இருந்ததுடன், 2017 யூலை 31 ஆந் திகதியில் உள்ளபடியான அந்த பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 4,132,663 வரை குறைவடைந்திருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 10,608,280 கூட்டுத்தொகையான தளபாடங்கள் மற்றும் பொருத்திகளுக்குரிய பட்டோலைகள், ரூபா 2,564,901 தொகையான நிலையான சொத்துக்களுக்குரிய சொத்துக்கள் பதிவேடு, ரூபா 2,069,392 தொகையான கைத்தொழில்களுக்கான 10 சதவீதமான பிடிகாசு தொடர்பில் விரிவான பட்டோலையொன்று, ரூபா 120,099 தொகையான செலுத்தப்படாத சம்பளம் மற்றும் வேதனங்களுக்குரிய பட்டோலைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால், கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 185 | பிரதேச சபையின் பொதுக் கணக்கில் ரூபா 5,678,291 தொகையான மாதாந்த சராசரி மிகை மீதியொன்று நிலவிய போதிலும், அந்த பணம் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணம் 571(3) | வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை கடந்த ரூபா 70,884 கூட்டுத்தொகையான 04 வைப்பு மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய PFD/RED/2015/08 பொது (i) ஆம் இலக்க பொது நிதிச் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 4.3 (உ) பிரிவு | சேவையை விட்டுச்சென்ற மற்றும் சேவை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள 11 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 236,765 கூட்டுத்தொகையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தென் மாகாண பிரதம செயலாளரின் சுற்றறிக்கை. | ஊழியர் பிணை வைப்புக் கணக்கில் 06 சந்தர்ப்பங்களில் ரூபா 19,908 தொகையான பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,773,593 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,509,595 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 5,263,998 ஆன அதிகரிப்பொன்றினை காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டின் மொத்த மீண்டெழும் செலவினம் மொத்த மீண்டெழும் வருமானத்தில் 83 சதவீதமான உயர்வான பெறுமதியொன்றினை கொண்டிருந்தது.

(ஆ) கடந்த இரு ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் சபையின் சுயமாக உருவாகும் வருமானத்தின் அளவினை மிகைத்து மீண்டெழும் செலவினங்களில் கவனத்திற் கொள்ளக்கூடிய அளவிலான அதிகரிப்பொன்றினைக் காட்டியது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் வருமானம் சேகரித்தலின் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 22.23 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் 15.49 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானம் சேகரித்தலிலான செயன்முன்னேற்றம் 70 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெற வேண்டிய வருமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் 7.76 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதிலான செயன்முன்னேற்றம் 60 சதவீதமாக இருந்தது.

### 2.3.2 வீதவரியும் வரியும்

ஆரம்ப நிலுவையில் 19 சதவீதம் மற்றும் பட்டியல்களின் 29 சதவீதமான அளவு மாத்திரம் அறவிடப்பட்டமையால், ஆண்டின் இறுதியில் உள்ளபடியான நிலுவை மீதி ரூபா 4,897,419 ஆன உயர்வான பெறுமதியொன்றினை கொண்டிருந்தது. நிலுவை வரியினை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 (1) (அ) பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 குத்தகை வாடகை

2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்திக்கமைய பஸ்மங் ஹன்திய 04 கடைகளின், வலஸ்முல்ல பொதுச்சந்தையின் 09 கடைகளின், 09 முதுன கடை அறைகளினதும் சிறப்பு அங்காடித் தொகுதியின் 42 கடைகள் தொடர்பில் உரிய உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கீழ்ப்பட்ட மக்களிடம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்ட தொகை திருத்தியமைக்கப்பட வேண்டிய போதிலும், பஸ்மங் சந்தியிலுள்ள 04 கடைகள் மற்றும் வலஸ்முல்ல பொதுச் சந்தையின் 10 கடை அறைகள் தொடர்பில் புதிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரினதும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நீதிமன்ற தண்டப்பணங்களுக்காக ரூபா 1,184,863 மற்றும் முத்திரைக் கட்டணத்திற்காக ரூபா 997,905 தொகை பெறவேண்டியதாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டினூடாக வீதி நிர்மாணித்திற்காக ரூபா 1,000,000 தொகையான நிதியேற்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த நிதியேற்பாடு முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட ரூபா 3,500,000 கூட்டுத்தொகையான 02 கைத்தொழில்களின் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாது போயிருந்தது.

(இ) பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 06 மில்லியன் பெறுமதியான செயற்திட்டங்களில் ரூபா 1,930,472 தொகையான செயற்திட்டங்கள் மாத்திரம் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வீதி செப்பனிடும் இயந்திரம்

சபைக்குச் சொந்தமான வீதி செப்பனிடும் இயந்திரத்தை ரூபா 5,600,000 இற்கு ஏலமிடுவதற்காக ஏற்பாடு செய்ததன் பின்னர் ரூபா 406,840 தொகையான செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டு பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னர் இரு சந்தர்ப்பங்களில் ரூபா 108,000 தொகை செலவிடப்பட்டு பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், மனுதாரர்கள் முன்வந்திருக்கவில்லை. பின்னர் சபையினால் மேற்படி மதிப்பீட்டு தொகையை குறைத்து விற்பதற்குக தேவையான அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், 2017 யூன் 27 ஆந் திகதி வரையிலும் அதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) பொருள் மெய்மையாய்வு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல்

மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் மூலம் இனங்காணப்பட்டிருந்த 22 பொருட்களின் பற்றாக்குறை தொடர்பிலான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் 2017 யூன் 27 ஆந் திகதி வரையிலும் தாமதப்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது.

(இ) வாகனப் பராமரிப்பு மற்றும் நிர்வாகம்

சபைக்குச் சொந்தமான 11 வாகனங்களுக்காக மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பதவியணியினர் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

i. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய பதவிகளின் 20 பேருக்கான மிகையொன்றும் 12 பற்றாக்குறைகளும் நிலவின. மிகைப்பதவிகளை முறைமைப்படுத்துவதற்கும் வெற்றிடங்களாக காணப்படும் பதவிகளை நிரப்புவதற்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. சபையின் அங்கீகரிக்கப்பட்ட வேலைத்தள ஊழியர்கள் மூவர் செயற்திட்டப் பொறுப்பாளர், பார வாகன இயக்குநர் மற்றும் சாரதி போன்ற பதவிகளிலும், 02 சுகாதார ஊழியர்கள் பார வாகன இயக்குநர்கள் மற்றும் சாரதி ஆகிய கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(உ) சுவீகரிக்கப்படாத ஆதனங்கள்

பிரதேச சபையினால் பாவனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள 07 காணிகள் மற்றும் 13 மயானங்களின் சட்டரீதியான உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், மேலும் 12 மயானங்களினது உரித்தினை கையேற்பதற்குரிய நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

2007 ஆம் ஆண்டு முதல் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட 11 பல்வேறு சொத்துக்கள் களஞ்சியத்தினுள் விளைவற்றுக் காணப்பட்டது.

**3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

வலஸ்முல்ல பொதுச்சந்தையின் 04 கடைகள் 05 வருடங்களாக பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படாமல் ரூபா 570,000 தொகையான வருமானம் சபைக்கு இழப்பாகியிருந்தது.

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 1,500,000 ஆன கலஹிடிய ஞானசார மாவத்தையில் அச்சுக்கல் பதிக்கும் பணியானது நிதி மற்றும் கொள்கைகள் குழுவின் பரிந்துரையின்றி சபையின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் ரூபா 500,000 படியான 03 பகுதிகளுக்கு வேறாக்கப்பட்டு பிரதேசத்தின் அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றுடன் 03 சந்தர்ப்பங்களில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மேற்படி வீதிகளின் அச்சுக்கல் பதித்து தயார்படுத்தும் மூன்று கட்டங்களிலும், கட்டமொன்றுக்கு 02 மீட்டர்கள் படி வீதியின் நீளம் குறைவாக நிர்மாணிக்கப்பட்டமையால், நிறைவேற்றப்படாத பணிகளுக்காக ரூபா 47,792 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள 08 செலவின விடயங்களின் ரூபா 32,750,827 கூட்டுத்தொகையான சேமிப்புக்களும், 03 வருமான விடயங்களுக்குரிய ரூபா 36,302,997 தொகையான பாதகமான விலகல்களும் காணப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கட்டுப்பாடு**

தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/யஹ/01/ந.ச.லே மற்றும் 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய சுற்றறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு சபையின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், சபையினுள் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை. கணக்காய்வுத் திட்டத்தினை தயாரிக்கும் போது நிதிப்பிரமாணம் 134 (2) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு